S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1978
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE வெள்ளி டிசம்பர் 05 * 2025 * மலர் -1 * இதழ்-187* VOL-1 * ISSUE-187 விலை ரூ.3 * பக்கம் -4

# திரைப்பட தயாரிப்பாளர் ஏ.வி.எம்.சரவணன் காலமானார்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேரில் அஞ்சலி!!



சென்னை, டிச. 5

ஏவிஎம் நிறுவனத்தின் உரிமையாளரும், தயாரிப்பாளருமான ஏ.வி.எம். சரவணன் (வயது 86) உடல்நலக்குறைவு மற்றும் வயது மூப்பின் காரணமாக இன்று காலை 5.30 மணியளவில் காலமானார். அவரது உடலுக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின்,நடிகர் ரஜினிகாந்த் உள்ளிட்டோர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர். ஏ.வி.எம். சரவணனின் இறுதிச் சடங்கு நேற்று மாலை 4 மணி அளவில் நடந்தது. ஏ.வி.எம். சரவணன் மறைவு திரையுலகினர் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ் சினிமாவில் பிரம்மாண்ட தயாரிப்பு நிறுவனங்களில் மிக முக்கியமானது ஏவிஎம் நிறுவனம். சிவாஜி கணேசன், எம்ஜிஆர் உள்ளிட்ட முன்னணி நட்சத்திரங்களுக்கு பல ஹிட் படங்களை கொடுத்திருக்கிறது. சிவாஜி, எம்ஜிஆர் மட்டுமின்றி ரஜினிகாந்த், கமல்ஹாசன், விஜயகாந்த், விஜய், அஜித், சூர்யா என பல ஹீரோக்கள் அந்தத் தயாரிப்பு நிறுவனத்தின் கீழ் நடித்திருக்கிறார்கள். எப்படியாவது ஏவிஎம் நிறுவனத்தின் பேனரில் ஒரு படத்திலாவது நடித்து விட வேண்டும் என்பதுதான் ஒரு நடிகரின் அதிகபட்ச கனவாக இருக்கும். தமிழ் சினிமாவின் முன்னோடிகளில் ஒருவரான ஏவி மெய்யப்ப செட்டியாரால் தொடங்கப்பட்ட நிறுவனமாகும். அன்பேவா, முரட்டுக் காளை, பாட்டி சொல்லைத் தட்டாதே, முந்தானை முடிச்சி, சம்சாரம் அது மின்சாரம், சிவாஜி, அயன், வேட்டைக்காரன், லீடர், திருப்பதி, ஜெமினி, எஜமான், மின்சார கனவு, ராஜா சின்ன ரோஜா, மனிதன் உள்ளிட்ட ஏராளமான படங்களை தயாரித்துள்ளது.ஏவி மெய்யப்ப செட்டியாருக்கு பின் அந்த நிறுவனத்தை ஏவிஎம் சரவணன் ( 86) நிர்வகித்து வந்தார்.

இவரின் காலத்தில் ஏவிஎம் நிறுவனம் அடுத்தக் கட்ட வளர்ச்சியை எட்டியது என்று சொல்லலாம். சிவாஜி படத்தை மிகப்பெரிய முதலீட்டில் தயாரித்து, தமிழ் சினிமாவுக்கு சர்வதேச சினிமாவின் கதவுகளை திறந்து விட்டவர். வெள்ளை உடை, நெற்றியில் குங்குமம், கனிவான பேச்சு ஆகியவையே ஏவிஎம் சரவணனின் அடையாளம் என்று சொல்லலாம். யாருடன் பேசினாலும் கைகளை கட்டிக் கொண்டு தன்னடக்கத்துடன் அமைதியாக உரையாடும் சுபாவம் கொண்டவர். இதன் காரணமாகவே ஏவிஎம் நிறுவனம் மீது நடிகர்களுக்கும், ரசிகர்களுக்கும் மிகப்பெரிய மரியாதை உண்டாகியது.

ஏவிஎம் நிறுவனத்தின் படங்கள் என்றால் நம்பி திரையரங்கிற்கு செல்லலாம் என்ற நிலையை உருவாக்கியவர் சரவணன். அதேபோல் தமிழ் சினிமாவில் குறைந்து வரும் குடும்பப் படங்களுக்கும், அதிக முக்கியத்துவம் கொடுத்தவர். 2014–ஆம் ஆண்டுக்கு பின் ஏவிஎம் நிறுவனம் தங்களின் சினிமா தயாரிப்பு பணிகளை நிறுத்திக் கொண்டது.ஏவி எம் சரவணனுக்கு எம்.எஸ். குகன், உஷா என்ற மகனும், மகளும் உள்ளனர். தற்போது இந்நிறுவனத்தை எம்.எஸ். குகன் கவனித்து வருகிறார். இந்நிலையில்,கடந்த சில ஆண்டுகளாக ஏவி எம் சரவணன் உடல்நிலை குறைவு ஏற்பட்டு அவ்வப்போது சிகிச்சை பெற்று வந்தார்.

இந்நிலையில் வயது மூப்பு காரணமாக மற்றும் உடல்நலக்குறைவு காரணமாக இன்று காலை 5.30 மணியளவில் காலமானார். தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின், அமைச்சர் மா. சுப்பிரமணியன், ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, முன்னாள் அமைச்சர் ஜெயகுமார், நாம் தமிழர் கட்சி சீமான், தனசேகர் எம்.சி., 'அட்வகேட் ஜெனரல்' பரத் ராமன், கவிஞர் வைரமுத்து, கபிலன் வைரமுத்து உள்ளிட்டோரும்,படத் தயாரிப்பாளர்கள் முரளி ராமன், 'விஷன் டைம்' ராமமூர்த்தி, 'விஜயா புரொடக்ஷன்' விஸ்வநாத ரெட்டி, கே டி குஞ்சுமோன், ஸ்வரூப் ரெட்டி, 'பாப்டா' தனஞ்செயன், முரளி ராமசாமி, சவுந்தர பாண்டியன், 'நாக் ஸ்டுடியோ' கல்யாணம், இயக்குனர்கள் எஸ்.பி. முத்துராமன், வி.சி. குகநாதன், 'சங்கர் குரு' ராஜா, பி. வாசு, வசந்த் சாய், ஜெயேந்திரா, நடிகர்கள் ரஜினிகாந்த், சிவகுமார், விஷால், பார்த்திபன், சூர்யா, விக்ரம் பிரபு, சின்னி ஜெயந்த், கருணாஸ், பிரமிட் நடராஜன், மோகன்ராமன், சரவணன், டிவி வரதராஜன், செல்முருகன், நடிகை கே.ஆர். விஜயா உள்ளிட்ட திரையுலகினர் பலரும் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.



ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மதிவேந்தன் இராசிபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அண்ணா சாலை அரசு மேல்நிலைப்பள்ளியில் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு மிதிவண்டிகளை வழங்கினார். அருகில் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.



சேலம்மாவட்ட எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அலுவலகம் சார்பில் ஆட்சியரகத்தில்,எய்ட்ஸ் குறித்த உறுதிமொழி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி கலெக்டர் பிருந்தாதேவி தலைமையில் அனைத்து துறை அதிகாரிகள், அலுவலர்கள் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.



ஓசூர் ஊராட்சி ஒன்றியம் அச்செட்டிப்பள்ளி ஊராட்சியில் 2 கோடியே 16 இலட்சம் மதிப்பில் தார்சாலை, கழிவுநீர் கால்வாய், சிமெண்ட் சாலை உள்ளிட்ட பணிகளுக்கு ஓசூர் சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷ் பூமிபூஜை செய்து துவக்கி வைத்தார். உடன் ஒன்றிய செயலாளர் ராமமூர்த்தி, முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் முனிராஜ், முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர் வெங்கடசாமி, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சீனிவாச ரெட்டி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## வீட்டின் சுவர் இடிந்து தொழிலாளி பலி!

### மனைவி 2 குழந்தைகள் காயம்!!



ராமநாதபுரம், டிச,5

ராமநாதபுரம் மாவட்டம் உத்திரகோசமங்கை அருகே உள்ள வெள்ளா கிராமத்தில் வசிப்பவர் கார்த்திகைசெல்வம்(45) தொழிலாளியான இவரது வீடு பழுதடைந்த நிலையில் இவருக்கு சொந்தமான மற்றொரு இடத்தில் செட் அமைத்து குடும்பத்துடன் குடியிருந்து வந்ததாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் நள்ளிரவு 1 மணியளவில் இவரது செட் அருகே உள்ள முருகானந்தம் என்பவரின் வீட்டு சுவர் இடிந்து இவரது செட் மீது விழுந்தது. இதில் கார்த்திகை செல்வம் பலத்த காயமடைந்தார். மேலும் அவரது மனைவி ஜெயமாலினி(40), மகன் ஜெயபிரகாஷ் (14), மகள் கீர்த்திகா ஸ்ரீ (8), ஆகியோர் காயமடைந்தனர். அக்கம்பக்கத்தினர் மீட்டு ஆம்புலன்ஸ் மூலம் ராமநாதபுரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியிலேயே கார்த்திகைசெல்வம் பரிதாபமாக உயிரிழந்தார். மனைவி, மகன், மகள் மூவரும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் குறித்து உத்திரகோசமங்கை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

## 12 நக்ஸலைட்டுகள் சுட்டுக் கொலை!

### 3 போலீசார் உயிரிழப்பு!!

பிஜாபூர், டிச.5

சத்தீஸ்கரின் பிஜாபூர் மாவட்டத்தில் போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 12 நக்ஸல்கள் கொல்லப்பட்டனர். இந்த சண்டையில் 3 போலீஸாரும் உயிரிழந்தனர். காயமடைந்த இரு போலீசாருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இதுகுறித்து பஸ்தர் மண்டல காவல்துறை ஐஜி சுந்தரராஜ் பட்டிலிங்கம் கூறியதாவது:

மாநில காவல்துறையின் மாவட்ட ரிசர்வ் காவல் பிரிவு போலீசார், சிறப்பு அதிரடிப் படையினருடன் கூட்டாக பிஜாபூர் தந்தேவாடா மாவட்ட எல்லையை ஒட்டிய வனப் பகுதியில் நக்ஸல் ஒழிப்பு நடவடிக்கையில் புதன்கிழமை ஈடுபட்டனர். அப்போது வனப் பகுதியில் மறைந்திருந்த நக்ஸல்கள் பாதுகாப்புப் படையினரை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தினர். போலீசார் தரப்பில் பதில் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த சண்டையில் மாவட்ட ரிசர்வ் காவல் பிரிவைச் சேர்ந்த 3 போலீசார் உயிரிழந்தனர். இருவர் காயமடைந்தனர். சண்டை ஓய்ந்த பிறகு அந்தப் பகுதியில் போலீசார் தீவிர தேடுதல் நடத்தியதில், குண்டு காயங்களுடன் உயிரிழந்த நிலையில் 12 நக்ஸல்களின் உடல்களைக் கண்டறிந்தனர். மேலும், துப்பாக்கிகள், வெடிமருந்துகளை போலீசார் கைப்பற்றினர். தேடுதல் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்த ஆண்டில் மட்டும் மாநிலத்தில் 275 நக்ஸல்களை பாதுகாப்புப் படையினர் சுட்டுக் கொன்றுள்ளனர்.இவ்வாறு கூறியுள்ளார்.



உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் கலெக்டர் பொற்கொடி தலைமையில் நடைபெற்ற விழாவில் அமைச்சர் பெரியகருப்பன் இணைப்புசக்கரம் பொருத்திய பெட்ரோல் ஸ்கூட்டர்களை பயனாளிகளுக்கு வழங்கினார். இதில் மானாமதுரை எம்.எல்.ஏ தமிழரசி, காரைக்குடி எம்.எல்.ஏ மாங்குடி, மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் பாலகிருஷ்ணன், நகர்மன்றத் தலைவர் துரை ஆனந்த், பேரூராட்சி தலைவர் சேங்கைமாறன் ஆகியோர் உள்ளனர்.



சென்னை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், தலைமையில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடனான ஆலோசனைக்கூட்டம் ரிப்பன் கட்டடக்கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/இணை ஆணையாளர் (கல்வி) க.கற்பகம், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, மாவட்ட வருவாய் அலுவலர்கள் நா. பூஷ்ணா தேவி (தேர்தல்), ஜி.சரவணமூர்த்தி, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



டித்வா புயலையொட்டி மீனவர்கள் கடலில் மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டு இருந்தன. தற்போது மீனவர்கள் மீன்பிடிக்க செல்லலாம் என்றதால் கடலில் மீன்பிடித்து குமரி மாவட்ட மீனவர்கள் கரை திரும்பி வருகிறார்கள். குளச்சல் மீன்பிடி துறைமுகத்தில் மலைபோல் குவித்து வைக்கப்பட்டுள்ள கிளாத்தி மீன்கள்.





## உலக மாற்றுத் திறனாளிகள் தினம்:

# 458 பயனாளிகளுக்கு 26 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவி!

## கலெக்டர் வழங்கினார்!!

திருப்பத்தூர் டிச.5

டிசம்பர் 3 உலக மாற்றுத் திறனாளிகள் தினம் கடைப்பிடிக்கப்படுவதை முன்னிட்டு, திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் உலக மாற்றுத் திறனாளிகள் தின விழா மாவட்ட ஆட்சியர் சிவசௌந்தரவல்லி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாற்றுத் திறனாளி குழந்தைகள் விதவிதமான உடைகள் அணிந்து மாறு வேடங்களில் அணி வகுத்து நின்று மாவட்ட ஆட்சியரை பூக்கள் கொடுத்து வரவேற்றனர். உலக மாற்றுத் திறனாளிகள் தினத்தை முன்னிட்டு விழிப் புணர்வு உறுதி மொழியினை மாவட்ட ஆட்சியர் தலைமையில் அனைவரும் ஏற்றுக் கொண்டனர். தொடர்ந்து மாற்றுத்திறனாளிகளுக்காக நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற 170 வெற்றியாளர்களுக்கு பாராட்டு சான்றிதழ் மற்றும் பதக்கம் வழங்கி மாவட்ட ஆட்சியர் பாராட்டினார்.

மேலும், மாற்றுத் திறனாளிகளுக்கான ஓவியப் போட்டியில் 69 மாற்றுத்திறனாளிகள் பங்கு பெற்றதில் வெற்றி பெற்ற 17 நபர்களுக்கு ரொக்க பரிசாக முதல் பரிசு ஆயிரம் இரண்டாம் பரிசு 500 மற்றும் மூன்றாம் பரிசாக 250 வழங்கப்பட்டது. மேலும் மாவட்ட ஆட்சியர் தன் விருப்ப நிதியிலிருந்து கூடுதலாக ஓவிய போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு ரொக்க பரிசு பத்தாயிரம் ரூபாய் வழங்கினார். முதல் பரிசு 5000 இரண்டாம் பரிசு 3 ஆயிரம் மூன்றாம் பரிசாக 2000 வழங்கப்பட்டது.

மத்திய அரசின் ஏ டி ஐ பி மற்றும் ராஷ்ட்ரிய வயோஸ்ரீ யோஜனா திட்டத்தின் கீழ் அலிம்கோ நிறுவனத்தின் மூலமாக 264 பயனாளிகளுக்கு 25.56 லட்சம் மதிப்பில் உதவி உபகரணங்கள் வழங்கப்பட்டது. மேலும் 4 மாற்றுத்திறனாளிகளுக்கு இலவச வீட்டு மனை பட்டா வழங்கப்பட்டது. மாற்றுத்திறனாளிகளுக்கான உதவி உபகரணங்கள் விளையாட்டுப் போட்டி மற்றும் ஓவியப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு என மொத்தமாக 458 பயனாளிகளுக்கு ரூபாய் 25 லட்சத்து 76 ஆயிரத்து 750 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் திருப்பத்தூர் ஜோலார்பேட்டை மற்றும் ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் கண்ணன் , துறை சார்ந்த அரசு அலுவலர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் ஏராளமான மாற்றுத்திறனாளிகள் பங்கு பெற்றனர்.

# திருத்தங்கள் காகித குழாய் நிறுவனத்தில் தீ விபத்து!

சிவகாசி டிச.5

விருதுநகர்மாவட்டம்சிவகாசி அருகேதிருத்தங்களில் பட்டாசு தயாரிக்க பயன்படும் காகிதக் குழாய் நிறுவனத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் இரண்டு டன் மதிப்புள்ள காகிதக் குழாய்கள் எரிந்து நாசமாயின திருத்தங்கள் முனியசாமி நகரில் ரமேஷ் என்பவருக்கு சொந்தமான பட்டாசு தயாரிக்க பயன்படும் காகித ட்யூப் ஒர்க்ஸ்நிறுவனம்செயல்பட்டுவருகிறது இங்குபட்டாசு தயாரிக்கதேவையானகாகிதகுழாய்கள்தயாரிக்கப்பட்டு வருகிறது இந்நிலையில் நேற்று இங்கு வழக்கமாக தொழிலாளர்கள் காகித குழாய் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர் இப்போது சுவாமி கும்பிடுவதற்காக ஏற்றி வைத்திருந்த குத்து விளக்கு தவறி கீழே விழுந்துள்ளது அப்போது கீழே குவித்து வைக்கப்பட்டிருந்த காகிதக் குழாய்கள் தீப்பற்றி மல மல எறிய தொடங்கியது இதில் சுமார் இரண்டு டன்மதிப்புள்ள காகித குழாய்கள் எரிந்து நாசமாயின அங்கு பணியில் இருந்த தொழிலாளர்கள் உடனடியாக வெளியேறியதால் உயிரிழப்புகள் எதுவும் ஏற்படவில்லை இது குறித்து சிவகாசி தீயணைப்புத் துறையினருக்குதகவல்தெரிவிக்கப்பட்டதுதீயணைப்பு துறை வீரர்கள் விரைந்து வந்து தீ மற்ற இடங்களுக்கு பரவாமல் தீயை அணைக்கும் பணியில் பணியில் ஈடுபட்டனர் இந்த தீ விபத்தால் அப்பகுதி முழுவதும் பெரும் புகை மண்டலமாக காட்சியளித்தது இந்த விபத்து குறித்து திருத்தங்கள் காவல் நிலைய போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்



## திருப்பத்தூர்

# புதிய பேருந்து நிலையத்திலிருந்து ஜமுனபுதூர் வரை புதிய பேருந்து!

## நல்ல தம்பி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்!!

திருப்பத்தூர் டிச.5

திருப்பத்தூர் பேருந்து நிலையத்திலிருந்து ஜம்முன புதூர்வழி செல்லும் மகளிர் காண விடியல் பயணம் பேருந்தினை திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் நல்லதம்பி துவக்கி வைத்தார்.

திருப்பத்தூர் புதிய பேருந்து நிலையத்திலிருந்து ஜம்மனு புதூர் வரை மகளிர் காண விடியல் பயணம் பேருந்து டி 4 பேருந்து இன்று பொதுமக்கள் பயன்பாட்டிற்காக தொடங்கி வைத்தார்.

## கோவை சந்தையின் முக்கிய பங்களிப்புடன்

# முன்பதிவுகளில் ரூ.1,000 கோடி மைல்கல்லைக் கடந்தது கோத்ரெஜ் கேபிட்டலின் ஆரோஹி!

கோவை , டிச.5

கோத்ரெஜ் இண்டஸ்ட்ரீஸின் துணை நிறுவனமான கோத்ரெஜ் கேபிடல் நிறுவனத்தின் பெண்களை மையமாகக் கொண்ட அதன் முன்முயற்சியான ஆரோஹி ஆனது, அக்டோபர் 2025 நிலவரப்படி மொத்த கடன் முன்பதிவுகளில் ரூ.1,116 கோடியைத் தாண்டியுள்ளதாக அறிவித்துள்ளது. நவம்பர் 2024 இல் தொடங்கப்பட்டதிலிருந்து, ஆரோஹி ரூ.552 கோடி சொத்துத் தளத்தை உருவாக்கியுள்ளது மற்றும் அதன் முதல் வருடத்திற்குள் 1,600க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களை பெற்றுள்ளது. இதில் கோயம்புத்தூர் முக்கிய பங்களிப்பு சந்தைகளில் ஒன்றாக உருவெடுத்துள்ளது.தேசிய மாற்றத்திற்கான இந்திய நிறுவனத்தின் ஆயோக் படி, தேசிய அளவில் பெண்கள் பெறும் கடன்களில் 3% மட்டுமே வணிக நோக்கங்களுக்காக உள்ளன, கோத்ரெஜ் கேபிடலின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி மணீஷ் ஷா, கூறுகையில் "இந்தியா தனது முழுப் பொருளாதாரத் திறனையும் வெளிப்படுத்த, நமது கடன் அமைப்புகள் பெண்களுக்காக ஏற்றதாக வடிவமைக்கப்பட்டதாக இருக்க வேண்டும். வளர்ச்சியை இயக்குவதில் அவர்களின் முக்கிய பங்கு இருந்தபோதிலும், நிதிச் சூழல் அமைப்பில் பெண்கள் தொடர்ந்து கட்டமைப்புத் தடைகளை எதிர்கொள்கின்றனர். பெண்கள் முன்னேறும்போது, வணிகங்கள் வளரும்போது மற்றும் சமூகங்கள்செழிக்கும்போது,அதைமேம்படுத்துவதில்ஆரோஹி என்றென்றைக்கும் முன்னனியில் இயங்கும் " என்றார்.



கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பொள்ளாச்சி சாலை, சுந்தராபுரம் யோகா மையத்தில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பாக, பூர்த்தி செய்யப்பட்ட கணக்கெடுப்பு படிவங்கள் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலமாக பெறப்பட்டு தேர்தல் ஆணையத்தின் செயலியில் பதிவேற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் சங்கீதா, உதவி ஆணையர் தட்சிணாமூர்த்தி, உதவி செயற்பொறியாளர் கனகராஜ், மண்டல சுகாதார அலுவலர் ஆண்டியப்பன், உதவி பொறியாளர் சபரிராஜ் ஆகியோர் உள்ளனர்.

## கள்ளக்குறிச்சி

# தெற்கு மாவட்ட கழக அவசர செயற்குழு ஆலோசனை கூட்டம்!

## ராமமூர்த்தி தலைமையில் நடைபெற்றது!!

கள்ளக்குறிச்சி டிச.5

தமிழ்நாடு பொதுப்பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களின் வழிகாட்டுதலின்படி.

கள்ளக்குறிச்சிதெற்குமாவட்ட கழக அவசர செயற்குழு ஆலோசனை கூட்டம், மாவட்ட கழக அவைத்தலைவர் ராமமூர்த்தி அவர்களின் தலைமையில் நடைபெற்றது.



இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும் ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க. கார்த்திகேயன்,B.Sc,MLA,அவர்கள் கலந்து கொண்டு, தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர்தளபதியார்அவர்களின்தலைமையில், திருவண்ணாமலையில் வரும் 14 ஆம் தேதி நடைபெற இருக்கும் இளைஞர் அணி மண்டல மாநாட்டில் கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழகத்திற்குட்பட்ட அனைத்து நிலை இளைஞர் அணி நிர்வாகிகளும் பெரும் திரளாக கலந்து கொள்வது குறித்தும், கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கு டிசம்பர் மாத இறுதியில் வர இருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர்,கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் நிகழ்ச்சி ஏற்பாடுகள் மிகவும் எழுச்சியுடன் அமைய வேண்டும் என்பது குறித்தும் கழக நிர்வாகிகளுக்கு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்.

மேலும் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் பெருநற்கிள்ளி அவர்கள்,

கள்ளக்குறிச்சி சட்டமன்ற தொகுதி பார்வையாளர் தாமரைக்கண்ணன் அவர்கள் உட்பட,மாநில,மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள், தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர் கள்மாவட்ட சார்பாக அணி அமைப்பாளர்கள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞர் அணி நிர்வாகிகள் என அனைவரும் திரளாக கலந்து கொண்டனர்.



பெருநகர சென்னை மாநகராட்சி, மாதவரம் மண்டலம், வார்டு 26, எடியம்மா நகர் பகுதியில் டிட்வா புயல் மழையின் காரணமாக சேதமடைந்த சாலையினை சீரமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.



பெரியார் பல்கலைக்கழக பட்டமேற்படிப்பு ஆராய்ச்சி மையம் மற்றும் நாட்டு நலப்பணித் திட்டம் இணைந்து நாட்டு நலப்பணித் திட்ட சிறப்பு முகாம் துவக்கவிழா நடைபெற்றது. இந்த சிறப்பு முகாமில் “YOUTH FOR MY BHARAT” எனும் தலைப்பில்,பழைய தர்மபுரி பஞ்சாயத்து அலுவலகம் அருகில் நடைபெற்றது. இந் நிகழ்வில் முனைவர் மோகனசுந்தரம் அவர்கள் சிறப்புரை ஆற்றினார், சபரி செல்வராஜ் முனைவர் செங்கோட்டுவேலன் பாதுகாப்பான கணினி மற்றும் கைப்பேசி பயன்பாடுகள் குறித்து கருத்துரை வழங்கினார். ONE HEALTH HOSPITAL தர்மபுரி சார்பில் இலவச பொது மருத்துவ முகாம் நடைபெற்றது. முகாமில், NSS துறையின் மாணவ–மாணவிகள் மற்றும் நாட்டு நலப்பணி திட்ட அலுவலர் முனைவர் பிரசாத், முனைவர் ரேவதி, முனைவர் வித்யாசாகர் உடன் இருந்தனர்.

# சிவகாசி பகுதியில் பெய்து வரும் தொடர் மழையால் பட்டாசு உற்பத்தி பணிகள் பாதிப்பு!

சிவகாசி டிச.5

விருதுநகர் மாவட்டம் சிவகாசியில் தொடர்ந்து கடந்த சில நாட்களாக மழை பெய்து வருவதால் பட்டாசு உற்பத்தி தொழில் பாதிப்படைந்துள்ளது விருதுநகர் மாவட்டம் சிவகாசி சாத்தூர் வெம்பக்கோட்டை சுற்றியுள்ள பகுதிகளில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பட்டாசு ஆலைகள் இயங்கி வருகிறது இங்கு இன் தீபாவளி பண்டிகைக்கான பட்டாசுகள் தயாரிக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வந்தது இந்நிலையில் விருதுநகர் மாவட்டம் சிவகாசி சுற்றியுள்ள பகுதிகளில் கடந்த சில நாட்களாக மழை விட்டு விட்டு தொடர்ச்சியாக பெய்து வருகிறது இதனால் பட்டாசு ஆலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் ஈரப்பதத்துடன் இருப்பதால் தொடர்ந்து உற்பத்தி பணியை இயக்க முடியவில்லை இதனால் பட்டாசு ஆலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை உலர வைக்க முடியவில்லை இதனால் ஆலைகளை தொடர்ந்து இயக்க முடியாமல் பட்டாசுஉற்பத்திப்பணியில்பெரும்பாதிப்பு ஏற்பட்டுள்ளது ஏற்கனவே பட்டாசு ஆலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட பட்டாசுகள் முழுவதும் தீபாவளி பண்டிகைக்கு விற்று தீர்ந்ததால் தற்போது கிறிஸ்துமஸ் புத்தாண்டு பண்டிகைகளுக்கு தேவையான பட்டாசு உற்பத்தி செய்ய முடியாமல் ஆளைநிர்வாகத்தினர்தவித்து வருகின்றனர்.

இதுகுறித்து பட்டாசு ஆலை உரிமையாளர் பாண்டியன் கூறுகையில் கடந்த தீபாவளி பண்டிகைக்கு உற்பத்தி செய்யப்பட்ட அனைத்து பட்டாசுகளும் பண்டிகையின் போது விற்று தீர்ந்துவிட்டது எப்போதுமே சிறிதளவு பட்டாசுகள் இருப்பு இருந்து கொண்டே இருக்கும் ஆனால் கடந்த ஆண்டு விற்பனை அதிகரித்ததால் ஆலைகளில் சுத்தமாக பட்டாசுகள் எதுவும் இருப்பு இல்லை இந்நிலையில் கிறிஸ்மஸ் புத்தாண்டு பண்டிகைக்கான ஆர்டர்கள் வந்துள்ளது ஆனால் தொடர்ந்து சிவகாசி பகுதியில் மழை பெய்து வருவதால் பட்டாசு உற்பத்தி பணியில் ஈடுபட முடியவில்லை இதனால் கிறிஸ்துமஸ் புத்தாண்டு பண்டிகைக்கான பட்டாசுகளை உற்பத்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது இதனால் 100 கோடி வரை வர்த்தகம் பாதிப்பு அடைந்துள்ளது என்றார்

## பார்ட்னர்ஷிப்பை அறிவித்த

# ஃபோன்பேவின் இண்டஸ் ஆப்ஸ்டோர்,மோ ட்டோரோலா இந்தியா!

சென்னை டிச.5

இண்டஸ் ஆப்ஸ்டோர் இன்று மோட்டோரோலாவுடன் புதிய பார்ட்னர்ஷிப் அறிவித்துள்ளது, இதன் மூலம் இந்தியாவில் உள்ள மோட்டோரோலா சாதனங்களில் இண்டஸ் ஆப்ஸ்டோர் முன்கூட்டியே கிடைக்கிறது. பயனர்கள் ஆங்கிலம் மற்றும் 12 இந்திய மொழிகளில் தனிப்பயனாக்கப்பட்ட அனுபவத்தை பெறுவதுடன், AI சார்ந்த குரல் தேடல் மற்றும் வீடியோ முன்னோட்ட வசதிகளைப் பயன்படுத்தி எளிதில் ஆப்புகளை கண்டுபிடிக்க முடியும்.பிரியா எம் நரசிம்மன், தலைமை வணிக அதிகாரி, இண்டஸ் ஆப்ஸ்டோர், இந்த பார்ட்னர்ஷிப் மூலம் இந்தியர்களுக்கு தடையற்ற அணுகலை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறார்கள் என்று தெரிவித்தார். இது இந்தியாவுக்கே தனிப்பட்ட, உள்ளூர்மயமாக்கப்பட்ட மற்றும் பொருளாதாரத்தை மாற்றும் அனுபவத்தை வழங்கும் முக்கிய முயற்சியாகும்.மோட்டோரோலா மொபிலிட்டி இந்தியா இயக்குநர் டி எம் நரசிம்மன் கூறியதாவது, இந்த ஒத்துழைப்பு பயனர்களுக்கு உள்ளூர் ரீதியாக பொருத்தமான மற்றும் பிரீமியமான அனுபவத்தை வழங்குவதோடு, இந்திய டெவலப்பர்களை சரியான பயனர்களுடன் இணைத்து கூடுதல் ஆதரவையும் வழங்கும். இண்டஸ் ஆப்ஸ்டோர், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ஆண்ட்ராய்டு ஆப் ஸ்டோராக, உள்ளூர் தேவைகள் மற்றும் கலாச்சாரத்திற்கேற்ற முறையில் உருவாக்கப்பட்டுள்ளது.



பெருநகர சென்னை மாநகராட்சி, கோடம்பாக்கம் மண்டலம், வார்டு127க்குட்பட்ட எஸ்.ஏ.எஃப் கேம் வில்லேஜ் பகுதியில் டிட்வா புயல் மழையின் காரணமாக விழுந்த மரம் பணியாளர்கள் மூலம் உடனடியாக அகற்றப்பட்டு போக்குவரத்து சீர்செய்யப்பட்டது.



பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் டிட்வா புயல் மழையினை முன்னிட்டு, கிண்டி ரேஸ் கோர்ஸ் வளாகத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் புதிதாக அமைக்கப்பட்ட 4 குளங்களிலும் நீர்நிறைந்துள்ளது. இதன் காரணமாக ரேஸ் கோர்ஸ் வளாகத்தினைச் சுற்றியுள்ள பகுதிகளில் மழைநீர்த்தேக்கம் ஏதுமின்றி மக்கள் பெரிதும் பயனடைந்துள்ளனர்

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



திருப்பூர் கிழக்கு மாவட்டம் தாராபுரம் கிழக்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட, ஒன்றியம், கொளத்துப்பாளையம்பேரூர்பகுதியில்சட்டமன்ற உறுப்பினர்தொகுதிமேம்பாட்டுதிட்ட 2025 2026 பணிகளை அடிக்கல் நாட்டுதல் மற்றும் பணி நிறைவு செய்த பணிகளை திறந்து வைத்தல் நிகழ்வில் தமிழ்நாடு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி துறை அமைச்சர் கழக துணைப் பொதுச்செயலாளர் மு.பெ. சாமிநாதன், தமிழ்நாடு மனித வள மேலாண்மை துறை அமைச்சர் கழக மாநில மகளிரணி துணை செயலாளர் N. கயல்விழி செல்வராஜ் திருப்பூர் கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் இல்ல பத்மநாதன் , தாராபுரம்கிழக்குஒன்றியபொறுப்பாளர்கே.கே.துரைசாமி, மாவட்ட,ஒன்றிய,பேரூர்,ஊராட்சி,கிளைக் கழக நிர்வாகிகள் அப்பகுதி மக்கள் வார்டு செயலாளர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.





விழுப்புரம் மாவட்டம் கோலியனூர் ஒன்றியம் தளவானூர் அணைகட்டில் நீர்வளத்துறை சார்பில் மாநில நிதி திட்டத்தின் கீழ் ரூ.84 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் அணைகட்டு புணரமைப்பு பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் விழுப்புரம் நீர்வளத்துறை செயற்பொறியாளர் அருணகிரி, உதவி செயற்பொறியாளர் சிவக்குமார், உதவி பொறியாளர் கபிலன் உட்பட பலர் உள்ளனர்.

### தங்க பதக்கம் வென்று ஊர் திரும்பிய

## விளையாட்டு வீரர்களுக்கு மேள தாளங்களுடன் உற்சாக வரவேற்பு அளித்த கிராம மக்கள்!



**வாணியம்பாடி டிச:5**

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் உள்ள ஜம்மு கிரீன் பீல்ட் மைதானத்தில் நவம்பர் 26 முதல் 30 வரை நடைபெற்ற 42, வது ஜூனியர் அளவிலான தேசிய வலைப்பந்து போட்டியில் அணிகள் பிரிவில் தமிழக பெண்கள் அணி தங்கப் பதக்கமும், ஆண்கள் அணி வெள்ளி பதக்கத்தையும் வென்றது.

மேலும் தனி திறன் போட்டியில் பெண்கள் ஒற்றையர் பிரிவில், வாணியம்பாடி அடுத்த வளையாம்பட்டு பகுதியை சேர்ந்த விளையாட்டு வீரர்கள் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் தங்கப்பதக்கமும், மற்றும் இரட்டையர் பிரிவில் தங்கப்பதக்கமும், பெண்கள் இரட்டையர், பிரிவில் வெள்ளி பதக்கமும், கலப்பு இரட்டையர் பிரிவில், வெண்கல பதக்கமும் வென்றுள்ளனர்,

மேலும் ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தையும் தமிழக அணி வென்றுள்ள நிலையில், நேற்று பதக்கங்களை வென்று ரயில் மூலம் ஊர் திரும்பிய விளையாட்டு வீரர்களை, வாணியம்பாடி ரயில் நிலையத்தில், வளையாம்பட்டு கிராம மக்கள் விளையாட்டு வீரர்களுக்கு, மேளதாளங்கள் முழங்க உற்சாக வரவேற்பு அளித்தனர்.



திருவள்ளூர் ஒன்றியம் (ம) ஈக்காடு புது வசந்தம் மாற்றுத்திறனாளிகள் கூட்டமைப்பு சங்கம் இணைந்து நடத்தும் 3ம் ஆண்டு சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின விழா (ம) நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது பல்வேறு பணிகளில் சிறப்பாக சேவை செய்தமைக்காக ஈக்காடு ஊராட்சி செயலாளர் ஆர் சுகுமார் என்பவருக்கு சிறப்பு விருந்தினர் வருவாய் கோட்டாட்சியர் ஆர் ரவிச்சந்திரன் கேடயம் வழங்கி சால்வை அணிவித்து பாராட்டி கௌரவித்தார்.

### உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்:

## இளைஞர் அணியினர் நலதிட்ட உதவி, பள்ளி குழந்தைகளுக்கு மதிய உணவு!



**தஞ்சாவூர். டிச.5**

தஞ்சாவூர் மங்கள புரம் கலைஞர் நூலகத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டா லின் 49 வது பிறந்த நாளையொட்டி மாநகர திமுக இளைஞர் அணி சார்பில் மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் வழக்கறிஞர் எம்.எம். மதிபாலன் ஏற்பாட்டில் மத்திய மாவட்ட செயலாளரும், திருவையாறு சட்டமன்ற உறுப்பினருமான துரை.சந்திரசேகரன்M.L.A ஆலோசனைக்கிணங்க தஞ்சை மாநகர செயலாளரும், தஞ்சாவூர் மேயருமான சண்.இராமநாதன் ஒப்புதலுடன் மத்திய மாவட்ட அவை தலைவர் சி.இறைவன் தலைமையில் 200 நலிவுற்ற பொது மக்களுக்கு நல திட்ட உதவிகள் மற்றும் மேம்பாலம் காது கேளாதோர் பள்ளியில் 250 குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது, செயற்குழு உறுப்பினர் து.செல்வம், மாவட்ட பொருளாளர் எல். ஜி.அண்ணாதுணைமேயர்அஞ்சுகம்பூபதி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் க.முகில் வேந்தன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். 0

இந்த நிகழ்வில் மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் வாசிம்ராஜா மற்றும் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் எஸ். ஆர்.எஸ்.செந்தமிழ் செல்வன்,சி.ஏ சுரேஷ், உதயநிதி, மற்றும் மாநகர துணை அமைப்பாளர்கள் பத்மா விஜய்,பிரபு,பிரசாந்த்,சதீஷ்குமார், திருஞானம், மாவட்ட துணை செயலாளர் கனக வள்ளி பாலாஜி, பகுதி செயலாளர்கள் எஸ். சி.மேத்தா, கார்த்திகேயன்,மாநகர கழக பொருளார் காளையார் சரவணன் வட்ட கழக செயலாளர் சுரேஷ் ரோச், ஜி.முத்துகுமாரசாமி, நிமல்பிரசாத்,ராஜா, ஞானசெல்வம்,ராஜ்குமார், வட்ட கழக நிர்வாகிகள் ,மண்டல குழு தலைவர் ரம்யா சரவணன்,கமலா ரவி,ரமணி , சார்பு அணி அமைப்பாளர்கள் ,துணை அமைப்பாளர்கள்,மாமன்ற உறுப்பினர்கள் லெனின், தமிழரசி, பெரியசாமி,ராஜா ,இளைஞர் அணி பகுதி அமைப்பாளர் விஜய், லிவின்குட்டி ,சீனிவாசன், கார்த்திக் மற்றும் பகுதி இளைஞர் அணி துனண அமைப்பாளர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### ஆம்பூர் அருகே

## 10 அடி நீள மலைப் பாம்பை வனத்துறையினர் மீட் னர்!



**ஆம்பூர்.டிச.5**

திருப்பத்தூர்மாவட்டம் ஆம்பூர் அடுத்த மிட்டாளம் ஊராட்சி குட்டகந்தூர் கிராமத்தில் விவசாயி கோதண்டன் என்பவரின் மாட்டு கொட்டகையில்சுமார்10 அடி நீளம் உள்ள மலைப்பாம்பு தஞ்சம் அடைந்து இருப்பதைகண்டு ஆம்பூர்வனத்துறையினருக்குத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

தகவலின் பேரில் ஆம்பூர் வனத்துறை அலுவலர் பாபு உத்தரவின் பேரில் வன ஊழியர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மாட்டு கொட்டகையில் இருந்த 10 அடி நீளம் உள்ள மலைப் பாம்பை மீட்டு அருகில் உள்ள காப்பு காட்டில் பத்திரமாக விட்டனர்.

## கிருஷ்ணசாமி மீது வழக்கு!

**சிவகாசி, டிச. 5**

விதிகளை டிக்கை எடுக்க அனுமதி மீறி பிரசாரம் செய்ததாக கோரி சிவகாசி நிதிமன் கிருஷ்ணசாமி மீது சிவ காசி போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். நத்தில் மாரனேரி எஸ்ஐ அருண்பாண்டியன் மனு புதிய தமிழ கம் கட்சி மாநாடு ஜனவரி மாதம் மதுரையில் நடைபெறுகிறது. இதற்கு ஆதரவு திரட்டி அக் கட்சி நிறுவன தலைவர் கிருஷ்ணசாமி பிரசாரம் மேற் கொண்டுதாக கூறப்பட் டுகிறது.விருதுநகர்மாவட்டம்,சிவகாசியில் கடந்த நவ. 25ம் தேதி விதி முறைகளை மீறி இரவு 11.40 மணி வரை சுற்றுப் பயணம் செய்து பிரசாரம் மேற் கொண்டதாக கூறப்படுகிறது. இது குறித்து நடவ தாக் கல் செய்தார்.

நீதிமன்ற உத்தரவுப் படி கிருஷ்ண சாமி மற்றும் விருதுநகர் மத்திய மாவட்ட செய லாளர் கனிப் பாண்டியன், சிவகாசி ஒன்றிய செயலாளர் முரு கன், நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் பெரியபொட் டல் பட்டி கணேசன், சிவகாசி ஒன்றிய அணி செயலாளர் சகாதேவன், சின்ன பொட்டல் பட்டி முருகன் உட்பட 8 பேர் மீது மாரனேரி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

### விளக்கேற்றியபோது விபரீதம்:

## காகிதக்குழாய் ஆலையில் தீ விபத்து!

**சிவகாசி, டிச. 5**

விருதுநகர் மாவட்டம், சிவகாசி அருகே திருத்தங்கல் முனியசாமி நகரில் ரமேஷ் என்பவருக்கு சொந்தமான பட்டாசு தயாரிக்க பயன்படுத்தப்படும் காகிதக்குழாய் தயாரிப்பு ஆலை உள் ளது.

இங்கு 10க்கும் மேற்பட்ட தொழிலா ளர்கள் வேலை பார்த்து வருகின்றனர். நேற்று காலை வேலை துவங்கும் முன்பாக தொழிலாளி ஒருவர் அங்கிருந்த சுவாமி படத்திற்கு விளக்கேற்றினார். அப்போது திடீரென விளக்கு தவறி கீழே விழுந்து குவித்து வைக்கப்பட்டிருந்த காகிதங்க ளில் தீப்பிடித்தது.

இதனால் அதிர்ச்சிய டைந்த தொழிலாளர்கள் உடனடியாக வெளியேறினர். அதனை தொடர்ந்து ஆலையில் மளமளவென தீ பரவியது. தகவல் அறிந்து விரைந்து வந்த சிவகாசி தீயணைப்பு வீரர்கள் நீண்ட நேரம் போராடி தீயை அணைத்தனர். தீ விபத்தின் காரணமாக அப்பகுதி முழுவதும் புகை மண்டலமாக காட்சியளித்தது.

இந்த விபத்தில் ஆலையில் வைத்திருந்த காகித குழாய்கள், மூலப்பொருள்கள் என பலலட்சம் ரூபாய் மதிப்பிலான பொருட் கள் எரிந்து நாசமானது. இது குறித்து திருத்தங்கல் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

## வாழைப்பழம் சாப்பிட்ட சிறுவன் மூச்சுத் திணறி சாவு!

### ஈரோட்டில் பரிதாபம்!!

**ஈரோடு, டிச.5–**

ஈரோட்டில் வாழைப்பழம் சாப்பிட்ட 4 வயது சிறுவன் மூச்சு திணறி பரிதாபமாக இறந்தார்.

இச்சம்பவம் பற்றிய விபரம் வருமாறு:–



ஈரோடு சத்யா நகரை சேர்ந்த மாணிக்கம்ம அன்னை காலட்சுமி தம்பதியின ரின் 5 வயது மகன் சாய்சரண் நேற்றிரவு வாழைப் பழம் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அப்போது அவன் மூச் சுவிட சிரமப்பட்டுள்ளான். இதைப் பார்த்த பதறிய அவனது பெற்றோர் உடனடியாக அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். ஆனால் செல்லும் வழியிலேயே பரிதாபமாக உயிரிந்தான். அரசு மருத்துவமனையில் சாய்சரண் மூச்சுக்குழாயை அடைத்திருந்த வாழைப்பழத்தை மருத்துவர்கள் அகற்றினர். கருங்கல்பாளையம் காவல்துறையினர்வி சா ர ணை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஆண் சடலம் மீட்பு!



**கோவை,டிச.5**

கோவை மாவட்டம் காரமடை பழைய பேருந்து நிலையம் அருகே காரமடை நகராட்சி அலுவலகம் செயல்பட்டு வருகிறது. இதன் அருகே நகராட்சியில் பயன்படுத்தப்படும் வாகனங்களை நிறுத்தும் இடம் உள்ளது.

கடந்த 1 ம் தேதி அங்கு பணிக்கு சென்ற பணியாளர்கள் வாகனம் நிறுத்தும் இடத்தில் ஒருவர் இறந்து கிடப்பதாக காரமடை காவல்துறையினருக்கு தகவல் அளித்தனர். அங்கு சென்ற போலீசார் சடலத்தை மீட்டு இறந்தவர் யார்? எந்த பகுதியை சேர்ந்தவர்? என்று விசாரணை மேற் கொண்டு வருகின்றனர்



கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன்,B.Sc,MLA,அவர்களின்முன்னிலையில்,ரிஷிவந்தியம் வடக்கு ஒன்றிய. கழக.செயலாளர்துரைமுருகன்.கலை இலக்கிய பகுத்தறிவு பேரவையின் மாவட்ட அமைப்பாளர் A.R. சீனு, வடமாந்தூர்கிளைக்கழக செயலாளர்அய்யனார்,கிளைக் கழக நிர்வாகி வெங்கடேசன் ஆகியோர் களின் ஏற்பாட்டில், ரிஷிவந்தியம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, ரிஷிவந்தியம் வடக்கு ஒன்றியம், வடமாந்தூர் ஊராட்சியை சேர்ந்த வெங்கடேசன் (பாமக) அவர்கள், மணிகண்டன் (அதிமுக) ஆகி யோர்கள் தங்களது ஆதரவாளர்கள் 100 க்கும் மேற்பட்டோருடன் நமது திராவிட முன்னேற்றக் கழகத் தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.



உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தினை முன்னிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மாற்றுத்திறனாளி நலத்துறையின் சார்பில் மாவட்ட அளவில் நடைபெற்ற ஓவியம் மற்றம் விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார். உடன் இணை இயக்குநர் (மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்) மீரா, முதல்வர் (திருப்பூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை) மனோன்மணி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சரவணக்குமார் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.



மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் வே. இரா. சுப்புலெட்சுமி, 341 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ. 1.41 கோடி மதிப்பிலான நல திட்ட உதவிகளை காட்பாடி விஐடி பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கி மாற்றுத் திறனாளிகளுக்காக சிறப்பாக பணிபுரிந்த மருத்துவர்கள் தன்னார்வ தொண்டு நிறுவனங்களை பாராட்டி சான்றிதழ்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் வேலூர் சட்டமன்ற உறுப்பினர்ப. கார்த்திகேயன், குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமுலு விஜயன், மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் மு.பாபு. மாநகராட்சி துணை மேயர் மா. சுனில்குமார், மண்டலக்குழுத் தலைவர் புஷ்பலதா வன்னியராஜா, மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கா.சு. சண்முகம், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர்பாபு உட்பட பலர் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள அனைத்து ஊராட்சியில் சாலைகள் சேறும் சகதியுமாக உள்ளது மற்றும் ஊராட்சியிலும் கொசு மருந்து அடிக்க வேண்டும்தினமும்குப்பைகளைஅகற்றவேண்டும்.என்பதைவலியுறுத்தி வழக்கறிஞர்அஜித்குமார் மற்றும் ஒன்றிய செயலாளர் சதிஷ் தலைமையில் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் கோரிக்கை மனு கொடுத்தனர்.தொடர்ந்து இதே நிலை நீடித்தால் பாமக சார்பாக வட்டார வளர்ச்சி அலுவலகத்தை முற்றுகை போராட்டம் நடைபெறும் என்பதை தெரிவித்தனர்.

### சிதம்பரம்

## ஆறுமுக நாவலர் மேல்நிலைப் பள்ளியில் அறிவியல் கண்காட்சி!

**சிதம்பரம் , டிச 5**

சிதம்பரம் ஆறுமுக நாவலர் மேல்நிலைப் பள்ளியில் சிதம்பரம் ரோட்டரி சங்கத்துடன் இணைந்து அறிவியல் கண்காட்சி நடைபெற்றது.கண்காட்சி பள்ளி மாணவ, மாணவிகள் தமிழ், ஆங்கிலம், சமூக அறிவியல், கணிதம், விஞ்ஞானம் மற்றும் இயற்கை உணவு சார்ந்த விவசாய பலன்கள் போன்ற திட்டங்களை கண்காட்சியில் வைத்திருந்தனர்.

நூற்றுக்கும் மேற்பட்ட திட்டங்களில் இருந்து 15 திட்டங்களை ரோட்டரி சங்கத்தினர் பரிசுக்கு உரியவனவற்றை தேர்ந்தெடுத்தனர். விழாவில் சிதம்பரம் ரோட்டரி சங்க தலைவர்க னகவேல் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு பரிசளித்தார். ரோட்டரி சங்க உறுப்பினர்கள் சக்திவேல் மற்றும் அருண் ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும்,



தலைமையாசிரியர், ஆசிரி ஆய்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டு மாணவர்களை ஊக்குவித்தனர்.

மேலும்,உணவு இடைவேளைக்கு பிறகு கண்காட்சி பிற பள்ளி மாணவர்களும் கலந்து கொண்டு திட்டங்களை பார்வையிடும் வசதி செய்து தரப் பட்டது.



## தாராபுரத்தில்

# வாக்குச்சாவடி ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம்!

தாராபுரம் டிச.5

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் தனியார் மண்டபத்தில் வாக்குச்சாவடி ஒருங்கிணைப்பாளர்கள்கலந்து ஆலோசனைக் கூட்டம் கழக துணை பொது செயலாளர் மற்றும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி துறை அமைச்சர் மாண்புமிகு மு.பெ. சாமிநாதன் அவர்களின் தலைமையில் தமிழ்நாடு மனித வள மேலாண்மை துறை அமைச்சர் மாண்புமிகு N. கயல்விழி செல்வராஜ் அவர்கள் ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர் கே.இ பிரகாஷ் திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் மற்றும் திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டல குழுத் தலைவர் இல. பத்மநாபன் முன்னிலையில் திருப்பூர் கிழக்கு மாவட்ட தி.மு.க ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் வாக்குச்சாவடி ஒருங்கிணைப்பாளர்கள்(S I R) ஆலோசனைக் கூட்டம் குமரகுரு வளாகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் தாராபுரம் நகர மன்ற தலைவர் பொறியாளர் கு.பாப்பு கண்ணன் உடன் ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகளும் கழக உடன்பிறப்புகளும் கலந்து கொண்டனர்.

## தாராபுரத்தில்

# மாற்றுத்திறனாளிகள் தினம் அனுசரிப்பு!



தாராபுரம் டிச.5

திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் மாற்றுத்திறனாளிக்கள் தினத்தை முன்னிட்டு கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மற்றும்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துக்களுடன் தமிழ்நாடு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன்

தமிழ்நாடு நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் K.N.நேரு தமிழ்நாடு மனித வள மேலாண்மை துறை அமைச்சர் N.கயல்விழிசெல்வராஜ் ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் திருப்பூர்கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் இல.பத்மநாபன் தாராபுரம் நகர் மன்ற தலைவர் பொறியாளர் கு.பாப்புகண்ணன் சுயநிதியில் நகர மன்ற தலைவர் அலுவலகத்தில் தாராபுரம் பகுதி சார்ந்த ஏழை குடும்பத்தைச் சார்ந்த மாற்றுத்திறனாளிகள் அழைத்து இனிப்பு,புத்தாடைகள், வழங்கி மரியாதை செய்து வாழ்த்து தெரிவித்து மகிழ்ந்தார்.

சோதனைகள் வருத்தினாலும் சவால்கள் மிரட்டினாலும் தன்னம்பிக்கையுடன் அவற்றை எதிர்கொண்டு நிமிர்ந்து நின்று எல்லோருக்கும் முன்னுதாரணமாகத் திகழ்கின்ற மாற்றுத்திறனாளிப் பெருமக்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

## வாணியம்பாடி

# அரசு மருத்துவமனையில் நூதன முறையில் ஸ்டீல் குழாய்கள் திருடிய இளைஞர் கைது!



வாணியம்பாடி.டிச.5

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அரசு மருத்துவமனை கழிவறைகலில் ஸ்டீல் குழாய்கள் மற்றும் பைப்புகள் அவ்வபோது காணாமல் போவது வாடிக்கையாக இருந்து வந்தது.

இந்த நிலையில் மருத்துவமனைக்கு வந்த நபர் ஒருவர் நோட்டமிட்டு கழிவறையில்குழாய்கள்கழற்றமுயன்றுள்ளார். இதனை பார்த்த மருத்துவமனை ஊழியர்கள்அந்தநபரைபிடித்துவிசாரித்துள்ளனர்.

அப்போது அந்த நபர் தான் நகராட்சி ஒப்பந்த ஊழியர் எனவும், இங்குள்ள நோயாளி ஒருவரை பார்க்க வந்ததாக கூறியுள்ளார். அதன் பின்னர் அவருடைய இரு சக்கர வாகனத்தை சோதனை இட்டு பார்த்தபோது மருத்துவமனை கழிவறைகளில் திருடப்பட்ட ஸ்டீல் குழாய்கள் இருந்தது தெரியவந்தது. இது குறித்து நகர போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். தகவலின் பேரில் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று அந்த நபரை கைது செய்து விசாரணை மேற்கொண்டதில் அந்த நபர் வாணியம்பாடி அடுத்த மேட்டுப்பாளையம் பகுதியை சேர்ந்த பரணிகுமார் என்பதும், கட்டிட தொழிலாளியாக பணியாற்றி வருவதாகவும், இதற்கு முன்பு நகராட்சி தற்காலிக பணியாளராக வேலை செய்து வந்ததாக விசாரணையில் தெரிய வந்தது.

மேலும் குடிப்பழக்கத்திற்கு அடிமையான பரணிகுமார் நாள்தோறும் அரசு மருத்துவமனை மற்றும் பல்வேறு இடங்களில் சென்று இது போன்ற குடிநீர் பைப்புகள் மற்றும் ஸ்டில் குழாய்களை திருடி சென்று அதனை விற்று மது அருந்தி வந்ததாக போலீசார் விசாரணையில் கூறியுள்ளார். மேலும் இது வரை அரசு மருத்துவமனையில் ரூ.50 ஆயிரம் மதிப்பிலான ஸ்டீல் பைப்புகள் மற்றும் குழாய்கள் திருடு போனதாக மருத்துவமனை நிர்வாகத்தில் கூறப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து போலீசார் சம்பவம் குறித்து வழக்கு பதிவு செய்து அவனிடம் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## அவிநாசியில்

# அரசு ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்!

அவிநாசி,டிச.5

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் உத்தரவின் பேரில் நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிரத் திருத்தப் பணிகளின் காரணமாக ஏற்பட்டுள்ள பணி சுமையை கண்டித்து, அவிநாசியில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தினர் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

போதுமான திட்டமிடல் இன்றி, ஊழியர்களுக்குத் தகுந்த பயிற்சி அளிக்கப்படாமலும், தேவையான கூடுதல் பணியிடங்களை உருவாக்காமலும், அவசரகதியில் நடைமுறைப் படுத்தப்பட்டு வருவதாகவும் மேலும், வாக்காளர் சிறப்புத் தீவிரத் திருத்தப் பணிகளை உடனடியாக முடிக்கச் சொல்லி வற்புறுத்துவதாகவும், பல இடங்களில் துறை ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் கூறினர்.அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம் மற்றும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் அவிநாசி வட்டக்கிளை சார்பில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.ஆர்ப்பாட்டத்திற்கு அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட இணைச் செயலாளர்ராமன் தலைமை தாங்கினார். வட்டக்கிளை நிர்வாகி கருப்பன் முன்னிலை வகித்தார். வருவாய்த் துறை, நெடுஞ்சாலைத் துறை, சத்துணவு மற்றும் அங்கன்வாடி உள்ளிட்ட துறைகளின் ஊழியர்கள் இதில் கலந்து கொண்டனர்.

## கார்த்திகை திருநாள்:

# தம்மம்பட்டி சிவன்கோவிலில் 10,008 தீபங்கள் ஏற்றம்!



தம்மம்பட்டி, டிச.5–

தம்மம்பட்டி காசி ஸ்ரீ விசாலாட்சி உடனுறை காசி ஸ்ரீ விஸ்வநாதர் திருக்கோவிலில், கார்த்திகை தீபத்திருநாளை முன்னிட்டு சிவன்,அம்பாளுக்கு சிறப்பு அபிசேகம் செய்து பூஜை செய்யப்பட்டது.

கோவில் சார்பில் மகா தீபம் , கோவில் மேல் பகுதியில்ஏற்றப்பட்டது.பொதுமக்கள்சார்பில்கோவில் முழுவதும் 10,008 தீபங்கள் ஏற்றப்பட்டன.

இதில் அகல்விளக்குகளால் சிவசிவ என்ற வடிவிலும், ஓம் என்ற எழுத்து வடிவிலும், வட்ட வடிவிலும் அகல் விளக்குகள் வைக்கப்பட்டு தீபங்கள் ஏற்றப்பட்டன. அதனையடுத்து தேவாரம்,திருவாசம் ,திருமந்திரம் ஆகியவற்றை இசை வாத்தியங்களுடன் தமிழிசை கச்சேரியாக பாடப்பட்டன. இரவில் சொக்கப்பனை எரிக்கப்ப ட்டது. அனைவருக்கும் சர்க்கரைப்பொங்கல், புளியோதரை ஆகியவை அன்னதானமாக வழங்கப்பட்டன. இவ்விழாவில் தம்மம்பட்டி, செந்தாரப்பட்டி, மங்கப்பட்டி,நாகியம்பட்டி,உலிபுரம், கீரிப்பட்டி, முருங்கப்பட்டி, வாழக்கோம்பை உள்ளிட்ட ஊர்களிலிருந்து நூற்றுக்க ணக்கானோர் பங்கேற்றனர்.



ஆத்தூர் அருகே கல்லாநத்தம் ஊராட்சியில் கார்த்திகை தீப திருநாளையொட்டி பிள்ளையார் கோவிலில் மேல் கோபுரத்தில் விளக்கு ஏற்றப்பட்டு கோவில் நிர்வாகத்தினர் சொக்கப்பனை ஏற்றினார்கள்.

## திருவண்ணாமலை

# தீபம் காணச் சென்ற பக்தர்களுக்கு அன்னதானம்!

ஊத்தங்கரை,டிச.5–

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை கிருஷ்ணகிரி திண்டிவனம் தேசிய நெடுஞ்சாலையில் திருவண்ணாமலை கார்த்திகை தீபத்தை காண கர்நாடக மாநிலம் பெங்களூர் மைசூர், ஆந்திரா போன்ற பல்வேறு மாநிலங்களில் இருந்து சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் இந்த தேசிய நெடுஞ்சாலை வழியாக சென்றனர். அவர்களுக்கு ஊத்தங்கரையில் உள்ள இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் ஓட்டுநர்கள் சங்கம் சார்பில் சென்னப்ப நாயக்கனூர் பைபாஸில் காலை முதல் உணவு வழங்கி வழங்கினர்.



மருதமலையில் அமைந்துள்ள ஸ்ரீ வள்ளி அம்மன் கோவிலில் திருக்கார்த்திகை தீபத்தை முன்னிட்டு சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு தீபம் ஏற்றப்பட்டது. வள்ளியம்மன் கோவில் அறக்கட்டளைதலைவர்செந்தில்பிரபு(எ)அன்புஉடன்இருந்தார்.

## சேலம் சந்தையின் முக்கிய பங்களிப்புடன்

# முன்பதிவுகளில் ரூ.1,000 கோடி மைல்கல்லைக் கடந்தது கோத்ரெஜ் கேபிட்டலின் ஆரோஹி!



சேலம்,டிச.5

கோத்ரெஜ் இண்டஸ்ட்ரீஸின் துணை நிறுவனமான கோத்ரெஜ் கேபிடல் நிறுவனத்தின் பெண்களை மையமாகக் கொண்ட அதன் முன்முயற்சியான ஆரோஹி ஆனது, அக்டோபர் 2025 நிலவரப்படி மொத்த கடன் முன்பதிவுகளில் ரூ.1,116 கோடியைத் தாண்டியுள்ளதாக அறிவித்துள்ளது. நவம்பர் 2024 இல் தொடங்கப்பட்டதிலிருந்து, ஆரோஹி ரூ.552 கோடி சொத்துத் தளத்தை உருவாக்கியுள்ளது மற்றும் அதன் முதல் வருடத்திற்குள் 1,600க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களை பெற்றுள்ளது. இதில் சேலம் முக்கிய பங்களிப்பு சந்தைகளில் ஒன்றாக உருவெடுத்துள்ளது. கோத்ரேஜ் மூலதனத்தின் ஒரு முயற்சியான ஆரோஹி, வடிவமைக்கப்பட்ட கடன் சலுகைகள், திறன் மேம்பாட்டு முயற்சிகள் மற்றும் ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள் மூலம் பெண்களுக்கு மிகவும் உள்ளடக்கிய நிதி சூழலை உருவாக்குவதில் கவனம் செலுத்துகிறது. மேலும், சிஎஸ்ஆர் முயற்சிகள் மூலம் ஆரோஹி அவர்களின் பங்கேற்பை ஆழப்படுத்தவும் பரந்த பொருளாதார தாக்கத்தை ஏற்படுத்தவும் நோக்கமாகக் கொண்டுள்ளது.கோத்ரெஜ் கேபிடலின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி மணீஷ் ஷா, கூறுகையில் "இந்தியா தனது முழுப் பொருளாதாரத் திறனையும் வெளிப்படுத்த, நமது கடன் அமைப்புகள் பெண்களுக்காக ஏற்றதாக வடிவமைக்கப்பட்டதாக இருக்க வேண்டும். பெண்கள் முன்னேறும்போது, வணிகங்கள் வளரும்போது மற்றும் சமூகங்கள் செழிக்கும்போது, அதை மேம்படுத்துவதில் ஆரோஹி என்றென்றைக்கும் முன்னனியில் இயங்கும் " என்றார்.



மேயர் ஆர்.பிரியா அவர்கள், டிட்வா புயல் மழையினை முன்னிட்டு, வி.க. நகர் மண்டலம், வார்டு 74, நேரு ஜோதி நகரில் மக்களுக்கு இரவு உணவினை வழங்கினார்.

## பண்ணந்தூர் அருகே,

# மொட்டலூர் கிராமத்தில் பச்சை நாயகி தாயார் உடனமர் மகா காளேஸ்வரர் ஆலயம் ஆண்டுவிழா!

### ஊர் பொதுமக்கள் சார்பில் நடைபெற்றது!!



கிருஷ்ணகிரி டிச.5

கிருஷ்ணகிரி மாவட்டம் பண்ணந்தூர் அருகே, மொட்டலூர் கிராமத்தில் எழுந்தருளியுள்ள அருள்தரும் பச்சை நாயகி தாயார் உடனமர் அருள்மிகு மகா காளேஸ்வரர் ஆலயம் ஆண்டுவிழா ஊர் பொதுமக்கள் சார்பில் நடைபெற்றது.

இதைத்தொடர்ந்து ஆதியம் அந்தமும் இல்லா அருள்பெறும் கருணையாலும் நால்வர் பெருமக்கள் சித்தர்கள் குருவருள் முன்னின்று அருள் செய்த நிலையில் அருள்மிகு மகாகணபதி பாலமுருகர் நந்தியம் பெருமாள் மகா காலபைரவர் ஆகிய தெய்வங்களோடு கூடிய அருள்தரும் பச்சைநாயகி தாயார் உடனமர் அருள்மிகு மகா காளேஸ்வரர் ஆலயம் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா நடை பெற்றது மங்களகரமான விசுவாவசு வருடம் கார்த்திகை கடந்த திங்கட்கிழமை ஏகாதசி திதி, ரேவதி நட்சத்திரம், சித்தயோகம் கூடிய நன்னாளில் மதிழ்மறை முழங்க (மதியம் 12.00 மணியளவில் திருக்கல்யாணம்) நடைபெற்றது இதில் அனைத்து ஊர் பொதுமக்கள், சிவனடியார், சாதுக்கள் ஆன்மீக அன்பர்கள் அனைவரும் கலந்துகொண்டு திருவருளும், குருவருளும் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ வேண்டி அருள் புரிந்தார்.



கார்த்திகை தீபத் திருவிழாவினை முன்னிட்டு கிருஷ்ணகிரி அருகே ஏரிக்கரையில் அமைந்துள்ள கால பைரவர் சுவாமி திருக்கோவில் பரணி மஹா தீபம் ஏற்றி வைக்கப்பட்டது, இதில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்துக் கொண்டு தீபம் ஏற்றி வழிப்பட்டனர்.

## ஈரோடு – கரூர் ரோட்டில்

# கேட்புதூர் ரயில்வே நுழைவு பாலத்தில் தேங்காய் ஏற்றி வந்த லாரி மோதி விபத்து!



மொடக்குறிச்சி, டிச.5:

மொடக்குறிச்சி அருகே கொடுமுடி செல்லும் சாலையில் உள்ள கேட்புதூரில் ரயில்வே நுழைவு பாலத்தின் முன்பு வைக்கப்பட்டிருந்த தடுப்பு கம்பியில் லாரி மோதியதால் போக்குவரத்து நிறுத்தம் செய்யப்பட்டு மாற்று வழியில் வாகனங்கள் திருப்பி விடப்பட்டுள்ளது.

ஈரோடு கரூர் செல்லும் ரோட்டில் சாவடிப் பாளையம்புதூர்அருகே உள்ள கேட்டுபுதூரில் ரயில்வே நுழைவு பாலம் உள்ளது. இந்த வழியாக ஈரோட்டில் இருந்து தென் மாவட்டங்களுக்கு செல்லக்கூடிய பஸ்கள், லாரிகள் மற்றும் கனரக வாகனங்கள் சென்று வருகிறது.

இந்நிலையில் கடந்த மாதம் இந்த ரயில்வே நுழைபாலத்தின் மேல் பகுதியில் இருந்த கான்கிரீட் சுவர் விழுந்ததால் போக்குவரத்து நிறுத்தம் செய்யப்பட்டு வாகனங்கள் திருப்பி விடப்பட்டது. அதனைத் தொடர்ந்து சீரமைப்பு பணிகள் முடிந்து கடந்த 15 நாட்களாக வாகனங்கள் சென்று வருகிறது.

இந்நிலையில் நேற்று கொடுமுடி அருகே உள்ள ஒத்தக்கடையில் இருந்து கர்நாடக மாநிலத்திற்கு தேங்காய் பாரம் ஏற்றி வந்த லாரி நேற்று மாலை கேட்புதூர் ரயில்வே நுழைவு பாலத்தின் தடுப்பு கம்பியில் மோதியது. இதனால் அவ்வழியாக செல்லும் வாகனங்களை நஞ்சை ஊத்துக்குளி ரோட்டில் திருப்பி விட்டு மீண்டும் முத்தூர் ரோடு வழியாக திருப்பி விட்டனர்.

சம்பவ இடத்திற்கு ரயில்வே அதிகாரிகள் மற்றும் மொடக்குறிச்சி போலீசார் மீட்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.